இருக்கிறார்கள். பாலுக்குச் சர்க்கரை என்ற நிலைமை வேண்டுமானால் பூர்த்தியாகியிருக்கலாம். ஆனால் கூழுக்கு உப்பில்லை என்ற நிலைமை பூர்த்தியாகவில்லை. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து சிவகங்கையிலே ஆரம்பிக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருப்பித் திருப்பி அதே கேள்வியா ? ஒரு கருத்தை இரண்டு கேள்விகளிலேயும் கேட்பதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கிற ஆலைகளை நடத்துவதே பெரும் கஷ்டமாக இருக்கிறது. நிலமையிலே கொஞ்சம் முன்னேற்றம் ஏற்படுமானால் நிச்சயமாக மீண்டும் நம்முடைய அரசு மத்திய அரசுக்கு மனுப் போடும். இப்போது உப்பைப்பற்றிக் கவலையில்லை. சர்க்கரையைப் பற்றித்தான் கவலை.

பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள்

*வினா எண் 442—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1976–77ம் ஆண்டில், அரசு விளம்பரங்கள் எந்தெந்த தினசரிப் பத்திரிகைகளுக்கு, எவ்வளவு மதிப்புள்ள விளம்பரங்கள் தரப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசுக்குத் கிடைத்த தகவலின் அடிப்படையில் விவர அறிக்கை* ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த விளம்பரங்கள் தரப்பட்ட காலம் நெருக்கடி நிலை காலம். இதிலே ஆங்கிலப் பத்திரிகை என்று 'இந்து' பத்திரிகையிலே ஆரம்பித்து 'அஸ்ஸாம் டிரிபியூன்' வரையிலும் கொடுத்துவிட்டு தமிழ்ப் பத்திரிகை என்று போட்டு 'தினத் தந்தி' யிலே ஆரம்பித்து சுதேசமித்திரன் வரையிலும் தரப்பட்டிருக்கிறதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால் முரசொலி, தீக்கதிர், தினகரன் போன்ற பத்திரிகைகளுக்கும் விளம்பரங்கள் தரக்கூடிய அளவிற்கு கொள்கையை அரசு வகுத்துள்ளதா ? ஆமெனில் அதை அறிவிக்க இயலுமா ?

---

* 521-252ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 மார்ச் 17

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, 1976–77ஆம் ஆண்டிலே அன்றைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருந்த அரசு சில தமிழ்ப் பத்திரிகைகளை, விளம்பரம் கொடுக்கின்ற பட்டியலிலே இருந்து நீக்கியிருந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு முரசொலி போன்ற பத்திரிகைகள் அரசு விளம்பரங்கள் கொடுக்கின்ற பட்டியலிலே சேர்க்கப்பட்டு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே 1976–77ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்ட விளம்பரங்களிலே தினத்தந்திப் பத்திரிகைக்கு மாத்திரம் ரூ. 2 லட்சத்து 83 ஆயிரத்து 999 அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கொடுக்கக்கூடிய தொகைகள் தெரியவில்லை. ஆனாலும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பத்திரிகைகளுக்கு இந்த விளம்பரங்கள் எந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகின்றன, பத்திரிகை விற்பனை எண்ணிக்கையின் அடிப்படையிலா அல்லது வேறு அடிப்படையிலா? நம்முடைய தமிழ்நாட்டில் எந்தெந்தத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டு வந்தது? இப்பொழுது எத்தனைத் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படுகிறது? எந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருகின்ற அடிப்படையை நிர்ணயிக்கின்றபொழுது, பத்திரிகையின் விற்பனையை முதலில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதற்குப் பிறகு, அதன் தரம், பத்திரிகைத் தர்மத்தைக் கடைப்பிடிக்கின்ற முறை, அதிலே வெளியிடுவதால் அரசுக்குக் கிடைக்கின்ற பலன், மக்களுக்குக் கிடைக்கின்ற பலன் ஆகிய இவைகளையெல்லாம் மனத்தில் எண்ணித்தான் பத்திரிகைப் பட்டியலில் இணைக்கப்படுகின்றன. இப்பொழுது எவ்வளவு பத்திரிகைகள் பட்டியலில் இணைக்கப்படுகின்றன என்ற விவரம் இதிலே இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் அந்த விவரத்தைச் சேகரித்துத் தர முடியும்

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, 1976–77இல் நெருக்கடி நிலை இருந்த காரணத்தினால் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சில பத்திரிகைகள், விளம்பரம் தரக்கூடிய அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன என்று சொன்னார்கள். அத்தகைய பத்திரிகைகள் எவையெவை என்று அறிந்துகொள்ள இயலுமா? அதைப்போலவே, அவர்கள் காலத்திலே நீக்கினாலும், இப்பொழுது நமது அரசில், இன்றைய அரசில் குறிப்பிட்ட பத்திரிகை எதற்கேனும் அரசு விளம்பரம் தருவதற்கு ஆட்சேபிக்கப்பட்டிருக்கிறதா? (குறுக்கீடு) அதாவது, இப்பொழுது நமது அரசில், இன்றைய அரசில் குறிப்பிட்ட

1979 மார்ச் 17]

பத்திரிகை எதற்கேனும், அவர்கள் பட்டியலிலிருந்து நீக்கியதைப் போல, இப்பொழுது எத்தனை பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் தரப்படுவது நீக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலிலிருந்து என்பதை அறிந்து கொள்ள இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, அவசர நிலை அமலில் இருந்தபொழுது—இந்த மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இருந்தபொழுது—சில தமிழ்ப் பத்திரிகைகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. முரசொலி, விடுதலை, அறமுரசு, தமிழ்முரசு, நாத்திகம், தினமணி, நீட்டோலை, தினச்சுடர், இவற்றில் முரசொலி, விடுதலை, அறமுரசு, தினச்சுடர் ஆகிய தமிழ் நாளிதழ்கள் 1977-ல் மீண்டும்,—இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு—பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் உண்மைக்குப் புறம்பாக நடக்கின்ற பத்திரிகைகளின் விவரங்களைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கும் உண்மைக்குப் புறம்பாக நடக்கும் பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள் கொடுக்கப்படுவது நிறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, உண்மைக்கு உறுதுணையாக அல்லது புறம்பாக என்ற அடிப்படையில் அரசு இதற்கு அளவுகோலாகக் காண்பதில்லை. நான் முன்பு சொன்னதைப்போன்று சில விதிகளை அடிப்படையாக வைத்து இறுதியாக அரசுக்குள்ள உரிமையையும் மனத்தில் வைத்துச் சில முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இப்பொழுது முரசொலி பத்திரிகைக்கு மீண்டும் விளம்பரம் கொடுப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதைப்போல மிகவும் முக்கியமாக இருக்கின்ற தினகரன் பத்திரிகையும் சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, தினகரன் பத்திரிகை இந்தப் பட்டியல் தயாரிக்கும் பொழுது இல்லாத காரணத்தால் இல்லை. பின்னாலே துவங்கியிருக்கிற பத்திரிகை. அந்தப் பத்திரிகையும் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.